திரு. என். கிட்டப்பா : அந்தத் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் நான்தான் அவர் மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அருள்கூர்ந்து அந்த விஷயத்தில் கவனம் செலுத்தி நடவடிக்கை எடுத்துக்கொள்வதோடு அந்தப் பாலங்களைக் கட்டி முடிக்க அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : அவர்தான் அந்தத் தொகுதி சட்ட மன்ற உறுப்பினர் காண்டிராக்டர் யார் என்பதும் அவருக்குத் தெரிந்திருக்கும். அதிகாரிகளிடத்தில் சொல்லி தக்க நடவடிக்கை எடுக்கலாம் நாங்கள் அந்தப் பகுதிக்கு வரும்போது சொன்னாலும் தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

வானொலி மன்றங்கள்

* 593 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டத்தில், 1973-74 ஆம் ஆண்டின் சிறந்த வானொலி மன்றம் என ஏதேனும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதா ?

(இ) ஆம் எனில், அது எது ?

(உ) இப்படிப்பட்ட வானொலி மன்றங்கள் எந்த அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படுகின்றன?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : (அ) ஆம்.

(இ) தஞ்சாவூர் மாவட்டம், திருப்பனந்தாள் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த குறிச்சி என்னும் கிராம வானொலி மன்றம்.

(உ) விவர அறிக்கை @ அவைமுன் தனியே வைக்கப்பட்டுள்ளது.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, இந்த வானொலி மன்றங்களை எல்லாம் பெரும்பாலும் ஏழை எளிய உழவர்கள் நடத்துவது இல்லை. யார் நடத்துகிறார்கள் என்பது கிராமவாசிகளுக்குத் தெரியும். இந்த மன்றங்களுக்கு வானொலி நிலையங்கள் என்ன என்ன உதவிகளை அளிக்கின்றன என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : வானொலி நிலையங்கள் இவற்றிற்கு எந்த உதவியும் செய்யவில்லை. கிராம மக்களின் முன்னேற்றத்திற்காக செய்திகளை எல்லாம்—விவசாயம்—நல்வாழ்வு—இளைஞர் சேரணி—இன்னும் ஐந்தாண்டுத் திட்டங்கள்—ஆகியவற்றைப்பற்றி எல்லாம் கேள்விகள் கேட்டு பல விளக்கங்களைப் பெற்று செயல்படுகிறார்கள். இந்த மன்றங்கள் எப்படிச் செயல்படுகின்றன என்பதை மாவட்ட ஆட்சித்

@ 121 ம் பக்கங்களில் இணைப்பு III ஆக அச்சிடப்பட்டுள்ளது.

1975 ஏப்ரல் 8]

தலைவர் பரிசோதனை செய்கிறார். பயன்தரக்கூடிய பல கேள்விகளைக் கேட்டு விளக்கங்களைப் பெறுகிற மன்றத்திற்கு என்று மாநில அளவில் ரூ. 300ம், மாவட்ட அளவில் ரூ. 200ம் மாநில அரசால்தான் பரிசு அளிக்கப்படுகிறது.

Madras–Coimbatore Express bus service

*594 *Q.*—THIRU K. M. SUBRAMANIAM : Will the Hon. the Minister for Transport be pleased to state—

(*a*) whether the Express bus service between Madras and Coimbatore hitherto operated via Vaniambadi, Krishnagiri, Dharmapuri, Mettur is now being operated in a different route ; and

(*b*) if so, the reasons therefor ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) ஆம்.

(இ) சென்னை—கோயம்புத்தூர் வழித்தடம் சுற்றிவளைத்துச் செல்வதாக இருந்ததாலும், பயண நேரம் அதிகமாயிருந்ததாலும் அதிக வருவாய் ஈட்டும் பொருட்டு இந்த வழித்தடம் 1—1—1972முதல் வேலூர், வாணியம்பாடி, திருப்பத்தூர், மாத்தூர், தருமபுரி, மேட்டூர் வழியாகத் திருப்பிவிடப்பட்டது.

THIRU K. M. SUBRAMANIAM : Sir, those who want to travel through Krishnagiri find it very difficult to do so. So, will the Government consider the routing of at least one Express Service through Krishnagiri from Madras ?

THE HON. THIRU S. RAMACHANDRAN : Sir, the very fact that the route has been uneconomical shows that passengers have not preferred it. As such, there is no proposal by the Government to route the bus service through Krishnagiri.

Toilet facilities for long distance passengers

*595 *Q.*—THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Transport be pleased to state—

(*a*) whether there is any proposal under the consideration of the State Transport Department to provide latrines wherever long distance buses stop ; and

(*b*) if so, the details thereof ?